1973 ஆகஸ்ட் 11]

வேண்டுமென்று மத்திய அமைச்சர் கூறியிருக்கிருரே, அதைப்பற்றி ஏதாவது தகவல் நமது அரசுக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லே.

New buildings for Munsiff Court at Tiruttani

*88 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to house the District Munsiff's Court, Tiruttani in new buildings ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) திருத்தணி மாவட்ட முன்சீப் நீதிமன்றமும், திருத்தணி சப்-மாஜிஸ்திரேட் நீதிமன்றமும் தற்போது தனியார் கட்டிடமொன்றில் உள்ளன. இந்த நீதிமன்றங்களே அரசுக் கட்டிடமொன்றில் அமைக்கும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடம் ஒன்றைக் கட்டும் எண்ணம் ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரி செயற்குறிப்பைப் பணிந்தனுப்பி யுள்ளார். இச் செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படி எந்த எந்த இடங்களில் முன்சீப் கோர்ட்டுகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அரசாங்கம் சொந்தக் கட்டிடம் கட்ட ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்க அலுவலகங்கள் நிறைய வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒரேயடியாக சொந்தக் கட்டிடங்களுக்குக் கொண்டுவர முடியாது.

திரு. இ. எஸ். தியாகராசன் : திருத்தணியில் முன்சிப் கோர்ட் கட்டிடம் கட்டும்போதே நீதிபதிகளுக்கும் க்வார்டர்ஸ் கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அளவில் உள்ள நீதிபதிகளுக்கு வீடு கட்டுகிற திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அங்கு நிறைவேற்றப்படாமல் இருந்தால் நிறைவேற்றப்படும்.

திரு. அ. தேவேந்திரன் : தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களை பரவலாக டிசென்டிரலைஸ் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் குழு பெரிய அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மு.ப. 9-30

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், சமீபத்திலே ஒரு நீதிபதி பஸ்ஸிலே போய்க்கொண்டிருந்தபோது, அங்கு அவரால் தண்டிக்கப்பட்ட குற்றவாளியின் சொந்தக்காரர் பஸ்ஸிலேயே அந்த நீதிபதியை அடித்து விட்டார். ஆகவே, நீதிபதிகளுக்கு, டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட், சப்-மாஜிஸ்டிரேட், இவர்களுக் கெல்லாம், வாகன வசதியும், வீட்டு வசதியும் உடனடியாகச் செய்து கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வீட்டு வசதி, இந்தியாவிலேயே, தமிழ் நாட்டிலேதான் எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள நீதிபதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. வாகன வசதி கொடுக்க முடியாது என்பது அங்கத்தின ருக்கே தெரியும். காரணம், ஏராளமான செலவு அரசுக்கு ஏற்படும்.

ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு முன்சீப் நீதிமன்றம்

* 89 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டசோழபுரத்தில் டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : நீதிமன்றங்களின் விசாரணை அதிகார வரம்பு குறித்த குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர், ஜெயங்கொண்டசோழபுரத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம் : பேரவைத் தலைவரவர்களே, ஜெயங்கொண்டத்திலே டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டுக்கான கட்டிடம் பார்த்து அமர்த்தினார்கள். மேலும், அரியலூரிலே தற்சமயம் அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் ஒன்றை ஏற்படுத்தி, வக்கீல்கள் அமரும் அந்த இடத்திலே விசாரணை நடத்திக்